# 3, 2, 1 ... பேசுங்கள்!

திரைகளைப் பார்ப்பது மொழி வளர்ச்சிக்கு தடையாக இருக்கும்.
1



கணிப்பலகை குழந்தையின் மூளையை அணைக்கிறது.
2

ஒரு நாளைக்கு ஒரு மணி நேர கணினித் திரை பார்ப்பது, அதுவே அதிகம்!
3

Tamoul

# திரை மற்றும் மொழி

3, 2, 1 ... பேசுங்கள்!

Neuchâtel-லின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையத்தின் திட்டம்.

திரை மற்றும் மொழி

1. 4 வயதுக்கு முன், ஒவ்வொரு நாளும் திரைகளைப் பார்ப்பது மொழி தாமதத்தின் அபாயத்தை பெரிதும் அதிகரிக்கிறது.

2. ஒரு திரைக்கு முன்னால், குழ-ந்தையின் கவனம் அதிகமாகவும் இருந்தாலும், மூளை புதிய சொ-ற்களைக் கற்றுக்கொள்வது மிகவும் குறைவாகவே இருக்கும்.

3. குறிப்பாக 12 வயதிற்கு முன்பே, குழந்தையுடன் மற்ற செயல்பாடுக-ளில் ஈடுபட்டு அவருடைய மொழி வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

Boudry, La Grande Béroche, Milvignes மற்றும் நகராட்சி ஆதரவுடன்

## திரைகளால் மொழி வளர்ச்சியின் விளைவுகள் *

* பின்வரும் அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட அறிவியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை

1 வருடத்திற்கு முன், இயக்கத்தில் (ON) இருக்கும் ஒரு திரை (சாதாரணமாக பின்னணி இரைச்சலும் கூட) கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது: மொழி மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சியில் தாமதம் ஏற்படும் அபாயம் 6 மடங்கு அதிகம்.

8 முதல் 16 மாதங்களுக்கு இடையில், ஒவ்வொரு மணிநேர காணொலியும் மிகச் சிறிய குழந்தைகளுக்கு ஏற்றது என்று கூறப்பட்டது ஆனால், ஒவ்வொரு மணி நேரமும் புதிய சொற்களைக் கற்றுக்கொள்வதில் 10% வரம்பை ஏற்படுத்துகிறது.

2 முதல் 4 வயது வரை, ஒரு நாளைக்கு இரண்டு மணிநேர தொலைக்காட்சி பார்த்தால், மூன்று மடங்கு அதிகமாக மொழி வளர்ச்சியை தாமதப்படுத்தும்.

## ஏன் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன?

ஒரு குழந்தை என்ன செய்கிறது அல்லது என்ன சொல்கிறது என்பதை வைத்து, ஒரு திரை செயற்படாது.


தொலைக்காட்சி (அல்லது மற்றொரு திரை) வீட்டில் இயங்கிக்கொண்டு இருக்கும் போது, நீங்கள் உங்கள் குழந்தையுடன் குறைவாக பேசுவீர்கள், அவர் உங்களுடன் குறைவாக பேசுவார்.

ஒரு வயது வந்தவர், குழந்தை சொல்வதை ஊக்குவிக்கிறார், கோருகிறார், பின்பற்றுகிறார், மறுசீரமைக்கிறார் அல்லது திருத்துகிறார், இவை அனைத்தையும் ஒரு திரை செய்யாது.

# தீர்வுகள்

குழந்தையின் வயதைப் பொறுத்து திரை நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள்.
(வலதுபுறத்தில் இருக்கும் அட்டவணையை ஒப்பிடவும்)

உங்கள் குழந்தை பரிந்துரைக்கப்பட்டதை விட அதிகமாக திரைகளை பார்க்கிறவரா?
மருத்துவ உளவியலாளர் Sabine Duflo-வின் "4 இல்லை" முறை, வரம்புகளை அமைக்க, உங்களுக்கு உதவ முடியும். முக்கிய கொள்கைகள் இங்கே உள்ளன:




ஆரம்பத்தில், உங்கள் குழந்தை மகிழ்ச்சியாக இருக்க மாட்டார், இது அவருக்கு கோபத்தை அல்லது அழுகையை ஏற்படுத்தும்: இது சாதாரணமானது!
அவருக்கு என்ன செய்வது என்று தெரியாமல் சலித்து விட்டால்: அதுவும் பரவாயில்லை! உறுதியாக இருங்கள், அது கடந்து போகும்.

## அவர் வசம் மற்றும் அவருக்கு எட்டும் தூரத்தில் விட வேண்டியது:

சில விளையாட்டுப் பொருட்கள்
(உ-ம்: கார்கள், விளையாட்டு சமையல் உபகரணங்கள், பொம்மைகள், கனசதுரங்கள்)

•

புத்தகங்கள்

•

காகிதம், பென்சில்கள், கைவினை பொருட்கள்


•

முடிந்தால், குழந்தைகளை வெளியில் விளையாட விடுங்கள்.

•

உங்களுக்கு சிறிது நேரம் இருந்தால், அவருடன் நூலகம் மற்றும் விளையாட்டு நூலகத்திற்குச் செல்லுங்கள்
(உ-ம்: Pestalozzi, Bibliomonde).

## சுருக்கமாக


கணிப்பலகை தொலைக்காட்சி
காணொலி விளையாட்டு
இணைய சமூக வலைப்பின்னல்கள்
நேரம்/நாள்
3 வயதிற்கு முன்
0
பெரியவர்க-ளுடன் பொருத்தமான நிரல்கள்
3 முதல் 6 வயது வரை
20 நிமிடங்கள்
பெரியவர்க-ளுடன் அருகில் பொருத்த-மான நிரல்கள்
பெரியவர்க-ளுடன் அருகில் வயது ஏற்ற சூழல் வரைபடம் செய்தியை மதிக்கவும்
6 முதல் 9 வயது வரை
30 நிமிடங்கள்
தன்னியக்கம்
தன்னியக்கம் வயது ஏற்ற சூழல் வரைபடம் செய்தியை மதிக்கவும்
9 முதல் 12 வயது வரை
60 நிமிடங்கள்
- கண்காணி-க்கப்பட்ட இணையம்
சமூக வலைத்த-ளங்கள்
12 வயதிற்கு பிறகு
குழந்தைக-ளுடன் திரை நேரத்தை முடிவு எடுங்கள்: அதிகபட்சம் 90 நிமிடங்கள்




## மேலும் செல்ல

பயனுள்ள இணைப்புகள்:

- Neuchâtel பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையம்: www.neuchatelville.ch/orthophonie
- Tutolangage காணொளிகள்: www.neuchatelville.ch/orthophonie
- பிரஞ்சு பேசும் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் சங்கம்: www.arld.ch
- Neuchâtel மாநிலத்தின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர்களுடைய சுயாதீனமான சங்கம்: lecolin.ch
- திரைகள் பற்றிய தகவல்கள்: www.3-6-9-12.org
- "4 இல்லை" முறை: www.sabineduflo.fr

பயனுள்ள முகவரிகள்:

- www.bibliomonde.ch
- www.bibliotheque-pestalozzi.ch
- www.bibliobus-ne.ch
- www.lacourteechelle.ch
- www.recifne.ch/espace-enfants
- www.ilotmots.ch
- www.croix-rouge-ne.ch

“3, 2, 1 … பேசுங்கள்!” Neuchâtel -லின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையத்தின் திட்டம். மேலும் தகவலுக்கு அல்லது எங்கள் சிற்றேடுகள் மற்றும் சுவரொட்டிகளை பெற்றுக்கொள்வதற்கு:
centre.orthophonie.neuchatel@ne.ch / 032 717 78 20
வரைபட விளக்க வடிவமைப்பு: hilti+rebmann / Illustrations: ANDA
ஆடி 2020-இல் அச்சிடுதல் முடிந்தது.

# 3, 2, 1 … பேசுங்கள்!

என் 2 வயது குழந்தை பேசவில்லை, அது வரும் என்று எனக்கு சொல்லப்பட்டது … நான் கவலைப்பட வேண்டுமா?

1

நான் நன்றாக பிரஞ்சு பேசா-விட்டாலும், என் குழந்தையுடன் நான் பிரஞ்சு பேச வேண்டுமா?

1




2

என் குழந்தை இரண்டு மொழி-களைப் பேசுவார், அதனால் தான் அவன் பிரஞ்சை மோசமாகப் பேசுகிறானா?

என் 3 வயது குழந்தை சரியான வாக்கியங்களை உருவாக்குவ-தில்லை, நான் கவலைப்பட வேண்டுமா?

3

ஒரு குழந்தை இளம் வயதிலேயே இரண்டாவது மொழியைக் கற்றுக்கொண்டால் அதை நன்றாகக் கற்றுக்கொள்வா-னா?

3

என் குழந்தை பேசும்போது வார்த்தைகளை சிதைத்து பேசுகிறார், நான் கவலைப்பட வேண்டுமா?

2




"3, 2, 1 … பேசுங்கள்!" குழந்தைகளின் மொழி வளர்ச்சி சம்பந்தமான 3-பகுதி உல்ல திட்டம். மேலும் அறிய, "மொழி வளர்ச்சி" மற்றும் "இருமொழி" ஆகிய கருப்பொருள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட எங்கள் இரண்டு சிற்றேடுகளையும் கண்டறியவும்.

## மொழி வளர்ச்சி

1. 2 வயதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், குழந்தை மற்றவர்களுடன் தொடர்புகொள்வது (சைகைகள், அவருடைய வார்த்தைகள்) மற்றும் தன்னை புரிந்துகொள்ளச் செய்கிறது. இது, வரும் மாதங்களில் வேகமாக முன்னேற வேண்டும். நிலைமை மாறவில்லை என்றால், உங்கள் குழந்தை மருத்துவரிடம் பேசுங்கள்.
2. குழந்தை தன்னைப் புரியவைக்க முடியவில்லை அல்லது அதன் விளைவாக பாதிக்கப்படுகிறார் (அவர் கோபப்படுகிறார், பேச முடியாமல் இருப்பது, தனக்குள் மூடிக் கொள்கிறார்) என்பதென்றால், கவலைப்பட வேண்டும்.
3. ஆம், 3 வயதில் ஒரு குழந்தை சரியான வாக்கியங்களைப் பயன்படுத்தி சிறிய உரையாடல்களில் பங்கேற்க வேண்டும். பேச்சுப் பிறழ்வு மருத்துவரிடம் அணுக தயங்காதீர்கள்.

## இருமொழி

1. இல்லை, உங்கள் குழந்தையுடன் தாய் மொழி பேசுவது முக்கியம், ஏனென்றால் அது பிரெஞ்சு வளர்ச்சிக்கு உதவும்.
2. இல்லை, இருமொழி ஒரு மொழி பிரச்சனைக்கு காரணம் அல்ல. அவர் பயன்படுத்தும் இரண்டு மொழிகளில், குழந்தையைப் பற்றி பேசுவது நமக்கு கடினமாக இருக்கும். மொழி கோளாறு இல்லாத குழந்தை எந்த பிரச்சனையும் இல்லாமல் இரண்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளும்.
3. இல்லை, வயது முக்கியமல்ல, வெளிப்பாட்டின் அளவு தான் முக்கியம். ஒரு குழந்தை ஒரு மொழியை எவ்வளவு அதிகமாகக் கேட்கிறதோ, பேசுகிறதோ, அவ்வளவு சிறப்பாக அவன் அதைக் கற்றுக்கொள்வான்.